**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண். 525/2023</u>**

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகேசன் | தொழில் | : விவசாயம் |
| த/பெ | : குட்டியப்பகவுண்டர் | கிராமம் | : கொட்டாப்புளிபாளையம் |
| வயது | : 61 | தாலுகா | : தாராபுரம் |
| ஜாதி | : கவுண்டர் | மாவட்டம் | : திருப்பூர். |
| சமயம் | : இந்து | | |

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் தாராபுரம். நான் சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் 12 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் போர்வெல் லாரி வைத்துள்ளேன். அதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாதம் ரூபாய் 1 லட்சம் சம்பாதிக்கிறேன். வேறு வழியில் எனக்கு வருமானம் இல்லை. எனது மனைவி எந்த வேலைக்கும் செல்லவில்லை. எனக்கு இரண்டு பிள்ளைகள். எனக்கு IDBI வங்கி, இந்தியன் வங்கி, பேங்க் ஆப் பரோடா ஆகிய வங்கிகளில் கணக்கு உள்ளது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனது வருமான வரி படிவத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனக்கு விவசாய பூமி உள்ளது. பிரதிவாதி சேலம் மேட்டுர் அணைப்பகுதியை சார்ந்தவர். பிரதிவாதி ஈரோடு அரசு மருத்துவமனையில் சித்தா மருத்துவராக இருந்தார். பிரதிவாதிக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதியின் மனைவி எங்கு வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. பிரதிவாதிக்கு தற்போது எத்தனை வயது இருக்கும் என்றால் 59 வயது இருக்கலாம். பிரதிவாதியை மொத்தமாக எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் சுமார் 10 முறை பார்த்துள்ளேன். எங்கு வைத்து பிரதிவாதியை நான் பார்த்துள்ளேன் என்றால் ஈரோடு அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்துள்ளேன். பிரதிவாதியின் செல்போன் எண் தெரியுமா என்றால் தெரியும்.

பிரதிவாதி எத்தனை செல்போன் நம்பரை எனக்கு கொடுத்துள்ளார் என்றார் ஒரு செல்போன் நம்பரை கொடுத்துள்ளார். பிரதிவாதி உயரமாக இருப்பாரா, குள்ளமாக இருப்பாரா, கருப்பாக இருப்பாரா அல்லது சிவப்பாக இருப்பாரா என்றால் கருப்பா உயரமாக இருப்பார். நான் எனது பி.எஸ்.என்.எல் செல்போன் எண்கள் 9448922564, 9965736143 மூலம் எத்தனை முறை நான் பிரதிவாதியை தொடர்பு கொண்டிருப்பேன் என்றால் சுமார் 10–15 முறை தொடர்பு கொண்டிருப்பேன். பிரதிவாதியின் செல்போன் எண்ணை என்னால் சொல்லமுடியுமா என்றால் எனது செல்போனை பார்த்துதான் பிரதிவாதியின் செல்போன் எண்ணை என்னால் கூறஇயலும். பிரதிவாதியுடன் எனக்கு எவ்வாறு பழக்கம் ஏற்பட்டது என்றால் என்னிடம் வேலை பார்க்கும் நபர்களை அரசு மருத்துமனைக்கு அழைத்து சென்றபோது, பிரதிவாதியுடன் எனக்கு பழக்கம் ஏற்பட்டது. திருச்சங்கோட்டில் எனது அலுவலகம் உள்ளது. அங்கிருந்து நாமக்கல், சேலம் பகுதிகளில் உள்ள எனது வேலை ஆட்களை அழைத்து கொண்டு ஈரோட்டில் பிரதிவாதி வேலை பார்த்த அரசு மருத்துவமனைக்கு நான் செல்வேன். என்ன மாதிரியான பிரச்சனைக்காக எனது வேலை ஆட்களை அழைத்துசென்றேன் என்றால் தோல் மற்றும் சிறுசிறு காயங்கள் சம்மந்தமான பிரச்சனைகளுக்காக நான் அவர்களை அழைத்து செல்வேன். பிரதிவாதி மாதம் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்றால் ரூ.1 லட்சத்திற்கு மேல் சம்பளம் வாங்கியதாக பிரதிவாதி என்னிடம் கூறினார். என்ன தேவைக்காக பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கினார் என்றால் குடும்ப செலவிற்காக கடன் வாங்கினார். பிரதிவாதி என்ன தேவைக்காக என்னிடம் கடன் வாங்கினார் என்பதை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார் என்றால் 10.09.2022 அன்று கடன் கேட்டார்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்கவும் சாட்சியின் ஒப்புதலின்படியும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.